# JAFFNA CENTRAL COLLEGE

# PRIZE DAY - 2013

*We cordially invite you to the Prize day*
*to be held at the Jamber Hall*
*on*
*Tuesday the 15th of October at 10.00 a.m*

**Chief Guest**

**Mr. Kathirgamanathan Ganeshanathan - B.Com. (Hon) P. G. Dip. in Edu. M. Ed**

(Director of Physical Education, University of Jaffna)

**Distribution of Prizes**

**Mrs. Gnanashakthi Ganeshanathan**

(Lecturer of College of Education – Jaffna)

## COLLEGE HYMN

1. Lord or our life, on this glad day,
Praise we Thy name, and humbly pray
That grace divine and godly fear,
May crown the labours of the year

2. The best and highest glory, Lord
Help us to seek Thy strength afford
With noble toil and joyous praise
Gladly to fill our round of days

3. Let Central's sons afar who dwell
In distant homes, the chorus swells;
Bless Thou their toil, and bind as one
Those present here, those long since gone.

4. Teach us to serve the land we love,
Steadfast for truth, all things to prove
Bid us in dark or light to stand
In honour firm, a chosen band

5. Teachers and taught may wisdom guide,
Through all the years with us abide;
Let this our College ever be
Home of one pure fraternity.

# பரிசில் நாள் - 2013
## வரவேற்புப்பா

**இராகம் :- கல்யாணி** **தாளம் : ஆதி**

பூங்கா அருகும் புகழ் மருவு மணிக் கூட்டுக் கோபுர அழகும்
மங்கா மிடுக்குடன் மீண்டும் எழுந்து நிமிர்ந்தே நிற்கும் நூலக அருகும்
எங்(ம்)கோ எதிர்வீர சிங்கம் பணியால் எடுப்பாய் நிமிரும் மைதான முன்றிலும்
கங்கா நதியாய் கல்வி நலம் பெருகும் மத்தியின் பரிசில் நாவின்று

(பூங்கா)

**இராகம் :- பாகேஶ்ரீ**

உதய ஆசான் குழாம் முனைந்து செய் பணியால் அரும்பும் கலைகள்
இதமுறு நடனம் இனிய நல்லிசை வளம் எங்கும் பொங்கி ஒலிக்கும்
மதம் கொண்ட யானையாய் மத்தியின் புதல்வர்கள் மண்ணில் வலம் வருவர்
நிதமும் மாணவர் நின்று பயில்வதால் நிமிரும் கல்வி இனிமேல்.

(உதய)

**இராகம் :- மதுவந்தி**

பழைய மாணவர் இளைய சோதரரை இனிது காக்க இங்கு வருக
விளை யாட்டுத் துறையை வீழாமல் காக்கின்ற மன்னன் கணேச நாதன்
மழை போல் கல்வியை மாணவர்களுக்கு மகிழ்ந்தே ஊட்டும் மனையாள்
சுவையாய் வெற்றிக்கு வழியாம் பயிரீன்ற பாவை ஞான சக்தி மகிழ்ந்து

(பழைய)

**இராகம் :- மத்தியமாவதி**


அகிலம் போற்றும் புதல்வரைப் பெற்ற அன்னையர் தந்தையர் அலையாய் வருக
முகிலை முட்டும் மாடங்கள் சூழ்ந்த அயற்பாட சாலைகள் அதிபரே வருக
வகிபங்கு கொண்ட முன்னாள் ஆசிரியர் அதிபர் எழுந்தே இன்னாள் வருக
மகிமை தாங்கிய மெதடிஸ்த சபையார் மாணவரை வாழ்த்த மண் வாழ்கவே

(அகிலம்)

பாவினம் :- ஆசிரிய விருத்தம்
ஆக்கம் :- கல்லூரி முதல்வர்
இசை :- திருமதி ந. உதயகுமாரன்
திருமதி க. கேதீஸ்வரன்

# நிகழ்ச்சி நிரல்

- பிரதம விருந்தினரை வரவேற்றல்
- மங்கல விளக்கேற்றல்
- கடவுள் வாழ்த்து
- வரவேற்புப் பாடல்
- ஆசியுரை
- அதிபர் அறிக்கை
- ஆங்கிலப் பேச்சு – செல்வன். சி. ராம்குமார்
- பரிசில் வழங்கல் - திருமதி ஞானசக்தி கணேசநாதன்
- தமிழ்ப் பேச்சு – செல்வன் சு. கோபிநாத்
- பரிசளிப்புப் பேருரை – பிரதம விருந்தினர்
  திரு. கதிர்காமநாதன் கணேசநாதன்
- நன்றி நவிலல்
- முன்மொழிபவர்
- வழி மொழிபவர்
- கல்லூரிக் கீதம்



# அதிபர் அறிக்கை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 2013ஆம் ஆண்டு பரிசுத்தின நன்னாளிலே உங்கள் அனைவரையும் சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். இந்நாளைச் சிறப்பிக்க இங்கே பிரதமவிருந்தினராக வருகைதந்துள்ள கல்லூரி பழைய மாணவனும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விளையாட்டுத்துறைப் பணிப்பாளருமாகிய திரு. கதிர்காமநாதன் கணேசநாதன் அவர்களே! அவர்தம் துணைவியார் யாழ் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி ஞானசக்தி கணேசநாதன் அவர்களே! மெதடிஸ்த திருச்சபையின் வணக்கத்துக்குரிய குருமுதல்வர் ரவிசங்கர் நைல்ஸ் அவர்களே! பழையமாணவர் சங்கத் தலைவர் அவர்களே! உறுப்பினர்களே! பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் அவர்களே! மற்றும் உறுப்பினர்களே! பாடசாலை அபிவிருத்திக்குழு செயலாளர் அவர்களே! உறுப்பினர்களே! கல்வித்திணைக்கள அதிகாரிகளே! அயற்பாடசாலை அதிபர்களே! ஓய்வு பெற்ற அதிபர் மற்றும் ஆசிரியர்களே! இடமாற்றம் பெற்றுச் சென்ற ஆசிரியர்களே! சபையில் நிறைந்திருக்கும் கல்விமான்களே! பெற்றோரே! நலன்விரும்பிகளே! எமது கல்லூரி ஆசிரியர்களே! மாணவர்களே! கல்விசாரா ஊழியர்களே! உங்கள் யாவர்க்கும் எனது வணக்கங்கள்.

மெதடிஸ்த சபையினரால் 19 ஆம் நூற்றாண்டில் அமைக்கப் பெற்ற இக்கல்லூரி இதன் அமைவிடத்தினாலும், வினைத்திறனினாலும், சமூகத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் செயற்பாங்கினாலும் தேசம் முழுவதும் புகழ்பரப்பி நிற்கின்றது. இன்றைய இவ்விழாவிற்கு நாயகனாக இவ்விழாவின் பிரதமவிருந்தினராகிய தாங்களும் கனிஷ்ட இடைநிலை முதல் உயர்தரம் வரை இப்பாடசாலையிலேயே கல்வி கற்று, பேராசானாக உடற்கல்விப் பணிப்பாளராக யாழ் பல்கலைக்கழகத்தில் பணிபுரிகின்றீர்கள். தங்கள் மனையாளும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் விரிவுரையாளராக கடமைபுரிகிறார்கள். தங்கள் இருவரையும் இவ் விழாவிற்கு அழைப்பதையிட்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பேருவகை கொள்கிறது.

கல்லூரியின் பல அபிவிருத்தித்திட்டங்கள், கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள், இணைப்பாடவிதானச் செயற்பாடுகள் என்பன பல சவால்களுக்கு மத்தியிலும் முன்னெடுக்கப்படுகின்றன. குறிப்பாக பாடசாலையில் கலையரங்கத்துக்குரிய காணியைப் பெற்றுக்கொள்ளும் முயற்சி வெற்றிபெற்றுள்ளது. மைதானப் புனரமைப்புப் பணிகளில் கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் அவர்கள் தனது உடல், பொருள், அனுபவம் அனைத்தையும் அர்ப்பணித்து, பழைய மாணவர்கள் பலரதும் ஆதரவையும் பெற்று முழுமூச்சாக ஈடுபட்டு வருகின்றமை மெச்சத்தக்கதாகும்.

கல்விப் பெறுபேறுகள் முன்னேற்றமான நல்ல அறிகுறிகளைக் காட்டுவது ஆரோக்கியமானதாகும். குறிப்பாக இவ்வருடம் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவரின் எண்ணிக்கை 15 ஆக உயர்ந்துள்ளது. சித்தி வீதம் 20% ஐ எட்டிப்பிடிக்கும் நிலையில் உள்ளது. க.பொ.த (உயர்) தரம் 2012 இல் கலைப்பிரிவு மாணவன் யூட் நிசாந்தன் 3 A பெற்றுள்ளார். செல்வன் கஜீபன் மருத்துவ பீடத்திற்கும், செல்வன் பாலகஜன், சஜீவன், விஜித் ஆகிய மூன்று மாணவர்கள் பொறியியற் பீடத்திற்கும் தெரிவாகியுள்ளனர். செல்வன் பிரணவன் தகவல் தொழினுட்ப பாடத்தில் மாவட்ட மட்ட முதலிடம் பெற்றுள்ளார். உள்ளக விளையாட்டுக்கள், தமிழ்மொழித் தினப்போட்டிகள் முதலிய பலதுறை களிலும் இக்கல்லூரி தேசியம் வரை பிரகாசிக்க முடிந்திருக்கிறது. தற்போது தனி நடனம் பிரிவு 5 போட்டியில் செல்வன் கலைதாசன் கௌதமன் முதலாம் இடம், குழு நடனம் (ஆதி வாசி) போட்டியில் முதலாம் இடம், பளுதூக்கும் போட்டியில் செல்வன் ந. டிலக்ஸ்குமார் தேசிய மட்டத்தில் 2ஆம் இடம் வென்றமை இதற்கொரு எடுத்துக் காட்டாகும். றோயல் கல்லூரி அகில இலங்கை ரீதியாக நடத்திய நாடகப் பிரதியாக்கப் போட்டியிற் குழு நாடகம் முதலாவது இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்க தாகும்.

எதிர்வரும் 2016 இல் 200 ஆவது ஆண்டினை கொண்டாடவுள்ள இந் நற்செய்தியினை இச்சபைக்கு பெருமையுடன் தெரியப்படுத்துகின்றேன்.

## மாணவர் தொகை - 2012

| | | |
|---|---|---|
| தரம் - | 1 - 5 | 495 |
| தரம் - | 6 - 9 | 704 |
| தரம் - | 10 - 11 | 352 |
| தரம் - | 11 - 13 | 461 |
| மொத்தம் | | **2012** |

## கல்லூரி ஆசிரியர் ஆளணி விபரம்

| | |
|---|---|
| அதிபர் சேவை | 04 |
| முதுகல்விமாணி பட்டதாரிகள் | 06 |
| முது விஞ்ஞானமாணி | 02 |
| முதுகலைமாணி பட்டதாரிகள் | 04 |
| விஞ்ஞான பட்டதாரிகள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் | 09 |
| விவசாய பட்டதாரிகள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் | 02 |
| வர்த்தகப் பட்டதாரிகள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் | 03 |
| கலைப்பட்டதாரிகள் பட்டப்பின் கல்வி டிப்ளோமாவுடன் | 18 |
| விஞ்ஞானப் பட்டதாரிகள் | 02 |
| வர்த்தகப் பட்டதாரிகள் | 04 |
| கலைப்பட்டதாரிகள் | 23 |
| கல்விமாணி பட்டதாரிகள் | 01 |
| அழகியல் பட்டதாரிகள் | 10 |
| விசேட பயிற்சி பெற்றவர்கள் | 07 |
| கற்பித்தலில் தேசிய டிப்ளோமா பெற்றவர்கள் | 32 |
| மொத்தம் | **127** |

## நமது ஆசிரியர் குழாமிற்புதிதாக இணைந்தோர்.

01. திருமதி. ச. மோகனதாஸ்
02. திரு. ச. கிருஷாந்தன்
03. திரு. ச. சோதிலிங்கம்
04. திரு. ச. பிரகாஷ்
05. திருமதி. J.S ஜெயகுமார்
06. திரு. இ. இரமணன்
07. திருமதி. இ. கோமதி
08. திரு. ச. கின்சிலி
09. செல்வி. ச. பிரியங்கா
10. திரு. ச. இந்திரகுமார்
11. திருமதி. சு. சிவநிதிராசா
12. திருமதி. வி. புஸ்பநாதன்
13. திருமதி. சு. சுதர்சினி
14. திரு. ச. சுகந்தன்
15. திரு. க. கலைச்சந்திரன்
16. திரு. V.P. மோகன்ராஜ்
17. திரு. ய.சி. ஷாணஸ் நௌறோஜி
18. திரு. சி. திவ்யன்
19. திருமதி. ப. சிவகௌரி
20. திரு. த. வசந்தன்
21. செல்வி. ச. தயாளினி
22. திரு. S.V. நிதர்சன்

இவர்களைக் கல்லூரிச் சமூகம் சார்பாக வரவேற்கின்றோம்.

## தற்காலிக இணைப்புப் பெற்றவர்கள்.

**திரு. சுபேதர் பெர்ணான்டோ**

இவ்வாசிரியர் கற்றல் செயற்பாடுகளுக்கு பங்களித்து வரும் அதேவேளை கடற்சாரணியம், மாணவர் விடுதி என்பவற்றுக்கு பொறுப்பாக இருந்து சிறப்பாக வழிநடத்தி வருகின்றார்.

**திரு. சு. சுரேஸ்மோகன்**

இவ்வாசிரியர் 10 வருடங்களுக்கு மேலாக் துடுப்பாட்ட பயிற்றுனராக இருந்து மாணவர்களை சிறப்பாக வழிநடத்தியதுடன், கடந்த மாதத்திலிருந்து தற்காலிக இணைப்புப்பெற்று கற்றல் செயற்பாடுகளுக்கும் உதவி வருகின்றார்.

## கல்வி சாரா ஊழியர்கள்

| | |
|---|---|
| தொழிலாளர் | 02 |
| காவலாளி | 02 |
| சுகாதாரத் தொழிலாளி | 03 |
| தற்காலிகத் தொழிலாளர் | 02 |
| | **09** |

## முகாமைத்துவக்குழு

| | | |
|---|---|---|
| அதிபர் | :- | திரு. S.K எழில்வேந்தன் |
| பிரதி அதிபர் | :- | திரு. ப. பாலபவான் |
| உப அதிபர் | :- | திரு. ம. மரியதாஸ் |
| உதவி அதிபர் | :- | செல்வி. சு. கந்தசாமி |
| பகுதித்தலைவர் | :- | திருமதி. சி. கந்தசாமி |
| | | திரு. M.J. ராஜரெட்ணம் |
| | | திரு. ப. திருஞானசம்பந்தன் |
| | | திரு. சொ. லோகேஸ்வரன் |
| | | திரு. இ. பிரபாகரன் |
| | | திரு. நா. புவனேந்திரன் |
| விளையாட்டுத்துறை முதல்வர் | :- | திரு. ஜெ. மோகன் |

## மாணவர் முதல்வர் சபை

| | | |
|---|---|---|
| பொறுப்பாசிரியர் | :- | திரு. ந. அனந்தசயனன் |
| சிரேஷ்ட மாணவர்கள் | :- | 01. செல்வன் ச. கஜரூபன் |
| | | 02. செல்வன் த. அபிராஜா |

## ஓய்வு பெற்றோர்.

### செல்வி. தனலெட்சுமி இராமலிங்கம்

எமது கல்லூரியில் சிறந்த வர்த்தகப் பட்டதாரி ஆசிரியையாக கடமையாற்றி, ஆரம்பப்பிரிவு பகுதித்தலைவராக பொறுப்பேற்று கல்லூரியின் வளர்ச்சிக்கு் தன்னை முழுமையாக அர்ப்பணித்த இவ் ஆசிரியையின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய பிரார்த்திக்கின்றோம்.

## பதவி உயர்வு பெற்றோர்

**திரு. கு. அகிலன்**

எமது கல்லூரியில் ஆசிரியராக சிறப்பாகக் கடமையாற்றி அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச் சென்ற திரு. கு. அகிலன் அவர்களையும் கல்லூரிச் சமூகம் பாராட்டுவதுடன், அவரது சேவை சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**திரு. தி. சந்திரகுமார்.**

எமது கல்லூரியில் சிரேஷ்ட ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும் சிறப்பாகச் சேவையாற்றி அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச்சென்ற திரு. தி. சந்திரகுமார் அவர்களையும் பாராட்டுவதுடன் சேவை சிறப்புற வாழ்த்துகின்றோம்.

**திரு. அ. மி. கி. மகேந்திரன்**

எமது கல்லூரியில் ஆசிரியராகவும், பகுதித்தலைவராகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்க பொருளாளராகவும் சேவையாற்றி அதிபராகப் பதவியுயர்வு பெற்றுச்சென்ற திரு. அ.மி.கி. மகேந்திரன் அவர்களையும் பாராட்டுவதுடன் சேவை சிறப்புற வாழ்த்துகின்றோம்.

## இடமாற்றலாகிச் சென்றோர்.

01. திரு. அ.மி.கி. மகேந்திரன்
02. திரு. தி. சந்திரகுமார்
03. திரு. வீ. தயாபாலன்
04. திரு. ஞா. திருக்கேதீஸ்வரன்
05. திரு. நா. ஸ்ரீரஞ்சன்
06. திரு. போ. உல்லாசனன்
07. திருமதி. சி. கந்தராஜ்
08. செல்வி. ப. யூக்கிறிஸ்ரின்
09. திரு. கு. அகிலன்

மேற்படி ஆசிரியர்கள் எமது கல்லூரியில் முழுமையாக அர்ப்பணித்து நிர்வாகக் கடமைகளிலும், கலைத்திட்ட மற்றும் இணைப்பாட விதானச் செயற்பாடுகளிலும் ஈடுபட்டுக் கல்லூரியின் வளர்ச்சிக்குச் சேவை யாற்றியுள்ளனர். இவர்களின் சேவையை மனதார பாராட்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

### பொதுப்பரீட்சைப் பெறுபேறுகள்.

**தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2012**

| | |
|---|---|
| தோற்றியோர் | 79 |
| சித்தியடைந்தோர் | 10 |

**க.பொ.த (சாதாரணம்) 2012**

| | |
|---|---|
| தோற்றியோர் | 168 |
| உயர் தரம் கற்க தகுதி பெற்றோர் | 114 |

**சிறந்த பெறுபேறுகள்**

| | | |
|---|---|---|
| 8 A, C | - | 01 |
| 7 A, B, C | - | 01 |
| 6 A, B, 2C | - | 01 |
| 5 A, B, 3 C | - | 01 |

**க.பொ.த (உயர்தரம்) 2012**

| | |
|---|---|
| தோற்றியோர் | 179 |
| பல்கலைக் கழக அனுமதி தகுதி பெற்றோர் | 78 |
| பல்கலைக் கழகம் அனுமதிக்கப்பட்டோர் | தீர்மானிக்கப்படவில்லை |

## Australian National Chemistry Quiz 2012

தேசிய ரீதியாக நடைபெறும் இப்பரீட்சையில் எமது மாணவர்களும் கீழ்ப்பரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளில் பங்குபற்றி சான்றிதழ்களும் பெற்றுள்ளார்கள்.

### மாணவ முதல்வர்சபை

மாணவர்களின் ஒழுக்க மேற்பார்வை, வழிநடத்தலில் மாணவ முதல்வர் சபை சிறப்பாகச் செயலாற்றுகின்றது. இதற்காக 25 சிறந்த மாணவர்கள் பயிற்றப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். மத்திய கல்லூரியின், பாரம்பரியங்கள், விழுமியங்களைச் சிறப்புடன் சுமந்து செல்வதில் இவர்களுக்குப் பெரும்பங்குண்டு, மத்திய கல்லூரி மாணவர்களை இனங்காட்டி நிற்பவர்கள் மாணவ முதல்வர்கள். கல்லூரியின் வரலாற்றைப் போலவே மாணவ முதல்வர்களுக்கும் வரலாற்றுப் பதிவும், கலாசாரமும் இருக்கின்றது. அமரர் விபுலானந்தன் நினைவுப் போட்டிகள், சிறந்த ஒழுக்க மேற்பாார்வை எனும் இவை இவர்களது சிறந்த பணிகளுக்குச் சில உதாரணங்களாகும். பெருந் துடுப்பாட்டச் செயற்பாடுகளில் இவர்களின் பங்கு பாரம்பரியங்களுக்குட் பட்டது. மேன்மேலும் பணிசிறந்து கல்லூரியின் பேரோங்க இவர்களை வாழ்த்துகின்றேன்.

### கல்லூரியிற் செயற்படும் மன்றங்கள்

#### மாணவரின் ஆளுமை விருத்தியிற் பங்காற்றும் மன்றங்கள் கழகங்களின் செயற்பாடுகள்

மாணவர்களின் தலைமைத்துவப் பண்புகளை வளர்த்தெடுப் பதுடன், இணைப்பாட விதானச் செயற்பாட்டின் அபிவிருத்திக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிற் செயற்படும் மன்றங்கள், கழகங்கள் மிகப் பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றன.

கிறிஸ்தவ மாணவர் மன்றம்
இந்துமா மன்றம்
தமிழ்சங்கம்
ஆங்கில மன்றம்
விஞ்ஞான மன்றம்
சமூகக் கல்வி மன்றம்
விவசாயக் கழகம்
இன்ரறக்ட் கழகம்

லியோ கழகம்

சேவைக் கழகம்

சாரணர் இயக்கம்

கடற்சாரணர் துருப்பு

கராத்தே கழகம்

மேலைத்தேய வாத்திய அணி

சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை

தேசிய இளைஞர் சேவை மன்றம்

தேசிய மாணவர் படை அணி

வர்த்தக மாணவர் மன்றம்

உயர்தர மாணவர் மன்றம்

நாடக மன்றம்

அறிவிப்பாளர் கழகம்

இளம் புத்தாக்குநர் கழகம்

சதுரங்கக் கழகம்

ஸ்கிறபிள் கழகம்

பான்ட் வாத்தியக் குழு

உள்ளரங்க விளையாட்டுக் கழகம்

## கிறிஸ்தவ மாணவர் மன்றம்

அறிவிலும், ஞானத்திலும், ஒழுக்கத்திலும் சிறக்க மாணவரை வழிநடத்துதல் இம் மன்றத்தின் நோக்கங்களாகும். வெள்ளிக்கிழமை தோறும் நடைபெறும் காலை ஆராதனைகளில் நற்சிந்தனை வழங்கப்படுகின்றது. மாதத்தின் முதல் வெள்ளிக்கிழமைகளில் திருப்பலி நிறைவேற்றப்படுகின்றது. ஆன்மீகக் கருத்துரைகள் இடம் பெறுகின்றன.

06.11.2012 இல் சிறப்பாக ஒளிவிழாவை நிறைவேற்றியது. கட்டுரை, கவிதை, பேச்சு, பாட்டு வேதாகமப் போட்டிகளை நடத்தி சான்றிதழ்களும், பரிசில்களும் வழங்கப்பட்டன. யாழ் மறைமாவட்ட மறைக்கல்வி தேர்வுக்கும் மாணவர்களை ஆயத்தம் செய்தது. எமது

கல்லூரி மாணவர்கள் Y. M. C. A யினரால் நடத்தப்படும் Carol Service இல் பங்குபற்றி சிறப்பித்து வருகின்றனர். பாடசாலையிலுள்ள வெவ்வேறு கிறிஸ்தவ மதப்பிரிவினரும் ஒன்றிணைந்து செயற்படுகின்றமை இம் மன்றத்தின் சிறப்பு அம்சமாகும்.

**இந்துமா மன்றம்**

திருக்கேதீஸ்வர ஆலய மகோற்சவம் நகுலேஸ்வர ஆலய தல யாத்திரை என்பனவற்றிற்கு ஆசிரியர்கள், மாணவர்கள் பங்காற்றிச் சிறப்பித்தனர். தோரணம் பின்னுதல், கோலம் போடுதல் முதலிய பல போட்டிகளை இம்மன்றம் நடத்தியது.

**தமிழ்சங்கம்**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் முத்தமிழ் வளர்ச்சிக்கும், யாழ்ப்பாண மாவட்ட தமிழ் மொழித்திறனுக்கும் களம் கொடுத்து ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. கடந்த ஆண்டு மாவட்ட மட்ட விவாதப்போட்டி நடத்தப்பட்டது. யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத் தில் வெகு எழுச்சியாக, வரலாற்றில் முதன்முறையாக முத்தமிழ் விழாவைக் கொண்டாடியது. க.பொ.த (சா.த) தர மாணவர்க்கு தமிழ்ப் பாடக் கருத்தரங்கை நிகழ்த்தியுள்ளது. அமரர் இராஜதுரை ஞாபகார்த்த பட்டிமன்றச் சமர் 2013 எனும் மாவட்ட மட்ட விவாதப் போட்டியை நடத்தியுள்ளது. பணிகள் தொடரும். 2012 தேசிய நிலைத் தமிழ்மொழித் தினப்போட்டியில் இரண்டு முதலிடங்கள் கிடைக்கப்பெற்றன.

**ஆங்கில மன்றம்**

ஆங்கில தினப் போட்டிகளில் பங்கு பற்றச் செய்தல் (British council) பிரித்தானிய சபையால் நடத்தப்படும் “சர்வதேச பாடசாலை விருது” போட்டியில் பங்குபற்றி சர்வதேச பாடசாலை விருது 2013இல் பெற்றுக்கொண்டனர்.

**விஞ்ஞான மன்றம்**

மாணவர்களின் விஞ்ஞான அறிவு, மற்றும் தேடல், ஆராய்ச்சி என்பவற்றுக்குக் களம் கொடுத்து வருகின்றது. கண்காட்சிகளில் மாணவர் களைப் பங்கேற்க வைக்கின்றது.

### சமூகக்கல்வி மன்றம்

மாணவர்களின் சமூகவியல் அறிவை வளர்க்கப் பலதிட்டங்களை முன்னெடுத்துச் சிறப்பாகச் செயற்படுகிறது.

### விவசாயக்கழகம்

விவசாய பாட மாணவர்களுக்கு வீட்டுத்தோட்டப்பயிற்சி வழங்கு வதுடன் அத்துறைசார்ந்த பல்வேறு திட்டங்களை அமுற்படுத்திவருகிறது.

### இன்ரறக்ட்கழகம்

கல்லூரியின் ஆரம்ப, நிறைவு வேளைகளில் வீதி ஒழுங்குகளைப் பேணிவருகின்ற இக்கழகம், மாணவர்கள் மூலம் இரத்ததான நிகழ்வை யாழ் போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து நடத்தியிருந்தது. றொட்றிக் கழகத்துடன் இணைந்து பொது அறிவு பரீட்சைகளை நடத்தியது. இவ்வருடம் சின்னஞ்சூட்டலும், “பரிதி” சஞ்சிகை வெளியீடும் நடை பெறவுள்ளன.

### லியோக்கழகம்

எமது பாடசாலை லியோக்கழகம் 25 அங்கத்தவர்களைக் கொண்டு சிறப்பாக பல்வேறு பொதுநலப் பணிகளைப் பாடசாலையிலும், பாடசாலைக்கு வெளியேயும் ஆற்றி வருகின்றது. எதிர் காலத்தில் மென்மேலும் பல பொது நலப்பணிகளை மேற்கொள்வதற்கான திட்டங்களுடன் செயற்படுகின்றது.

### சேவைக்கழகம்

மாணவர்களது வீதியொழுங்கையும், துவிச்சக்கர வண்டித்தரிப்பிட வொழுங்கையும் கண்காணிக்கிறது.

### சாரணர் இயக்கம்

சாரணர் இயக்கம் அதன் வழமையான செயற்பாடுகளுடன், பொது நிகழ்வு, விளையாட்டுப்போட்டி போன்ற பல நிகழ்வுகளுக்கும் தமது படையணி மூலமான சேவையை நல்கிவருகிறது. இவ்வாண்டுக்கான சாரணிய படைமுகாமை மறைந்த ஆசிரியர் அமரர் வீரசிங்கம் ஜெகதீஸ்வரன் நினைவாக மூன்று நாட்கள் சிறப்பாக நடத்தி அவர் சேவையை நினைவு கூர்ந்தது.

## கடற்சாரணர் துருப்பு

1916ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட எமது கல்லூரியின் சாரணர் துருப்பு தனது நூற்றாண்டு நிறைவை 2016ஆம் ஆண்டு கொண்டாடவுள்ள நிலையில் கல்லூரியின் வரலாற்றில் ஒரு மைல் கல்லாக இவ்வாண்டு மே மாதம் 22ஆம் திகதி கடற்சாரணர் படையணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பழைய மாணவர்களின் ஏகோபித்த ஆதரவுடன் இப்படையணி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை கல்லூரிக்கும் அதன் செயற்பாடுகளுக்கும் உந்து சக்தியாக அமைந்துள்ளது. கடற்சார் போட்டிகள், சாரணர் திறமைசார் போட்டிகள் உள்ளடங்கலாக முதலாவது பயிற்சிப்பாசறையும் சிறப்பாக நிறைவுற்றுள்ளது. மேலும் கல்லூரியின் சகல செயற்பாடுகளிலும், விழாக்களிலும் கடற்சாரணர் தமது சேவையை உச்ச அளவில் வழங்கி வருகின்றனர்.

## கராத்தே கழகம்

தினமும் இருநாட்கள் பயிற்சி வழங்கப்படுகின்றது. இதில் 40 மாணவர்கள் பயிற்சி பெறுகின்றனர். இலங்கை கராத்தே சம்மேளனத்தினால் நடத்தப்படும் மாகாணப் போட்டிகளில் பல மாணவர்கள் பங்கு பற்றி வெற்றியீட்டி தங்கப் பதக்கம், வெள்ளிப்பதக்கம் பெற்று தேசிய மட்ட போட்டிகளுக்கு தகுதி பெற்றனர். இல்ல மெய்வல்லுநர் போட்டியின் பொது இடைவேளை நிகழ்வாக கராத்தே கண்காட்சி மற்றும் சாகச நிகழ்வுகளும் நடைபெற்றது. தகுதிகாண் பரீட்சை நடத்தப்பட்டு தரச் சான்றிதழ் வழங்கப்பட்டது.

## மேலைத்தேயவாத்திய அணி

கல்லூரியின் விசேட நிகழ்வுகளில் ஏனைய சமூக பொது நிகழ்வுகளிலும், அரச நிகழ்வுகளிலும் பங்கேற்கும் நல் நோக்குடன் மிக சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

கடந்த விளையாட்டுப் போட்டியில் மைதானத்தில் இடைவேளை நிகழ்வை அலங்கரித்து இலகு அசைவு நிகழ்வை நடத்தினர்.

## சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிப்படை

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பரியோவான் முதலுதவிப் படையணி வருடாந்தம் பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. பாடசாலையில் நடைபெறுகின்ற நிகழ்வுகள், சமூகத்தில் நடைபெறுகின்ற பொது நிகழ்வுகளில் முதலுதவிச் சேவையினை வழங்கி வருகின்றது. ஒவ்வொரு வருடமும் புதிதாக இணைகின்ற மாணவர்களிற்கு முதலுதவிப் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது. 36 மாணவர்கள் முதலுதவி பயிற்சி மற்றும் பரீட்சையில் சித்தியடைந்துள்ளார்கள்.

எமது பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் இவருக்கு Do, 4 பேருக்கு sergeant, 8 பேருக்கு Corporal பதவிகள் வழங்கப்பட்டு பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

**சேவைகள் :-** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவப்பீடத்தின் கண்காட்சி, யாழ் பொது வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட வலிப்பு நோய் ஊர்வலம், நல்லூர் கந்தசுவாமி ஆலயம், நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் உற்சவ காலப்பகுதிக்கான சேவைகள் கல்லூரி பரிசளிப்புவிழா, பெருந்துடுப்பாட்டப் போட்டி, சென்றல் இரவு நிகழ்வு, மாணவர் பிரியாவிடை நிகழ்வு ஆகியவற்றில் எமது படையணியினர் முதலுதவிச் சேவையை வழங்கியுள்ளனர்.

## தேசியமாணவர் படையணி

எமது கல்லூரி மாணவன் சாஜன் க. கௌதமன் அனுராதபுர படையணியில் சிறந்த அணித்தலைவராகவும், சிறந்த முன்வைப்பாளர், சிறந்த நடிகர்களுக்கான கிண்ணங்களையும் பெற்றதோடு, வெளிநாடு செல்வதற்கான இலங்கை அரசின் புலமைப்பரிசில் பெற்று 2012 தை மாதம் நேபாள நாடு சென்று பயிற்சியினைப் பெற்று வந்தள்ளதோடு, தேசிய மாணவர் படையணியின் புலமைப்பரிசில் வெளிநாடு சென்ற முதலாவது தமிழ் மாணவன் என்ற பெருமையினையும், இலங்கை ஜனாதிபதியிடமும், நேபாள ஜனாதிபதியிடமும் பாராட்டையும் பெற்றுள்ளதுடன் கேடயங் களையும் பெற்று எமது கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளமை மகிழ்ச்சிக் குரியதாகும்.

**உயர்தர மாணவர் மன்றம்**

உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடலைச் சிறப்பாக நடத்தியது, மாணவர்களின் சமூகப் பொருத்தப்பாட்டிற்குக் களம் கொடுத்துதவுகின்றது.

**வர்த்தக மாணவர் மன்றம்.**

வர்த்தகப் பிரிவு மாணவர்களின் கலைத்திறன் விருத்திச் செயற்பாடு, துறைசார் நிபுணர்களின் கருத்தரங்கு என்பனவற்றையும் நிகழ்த்திவருகிறது. மத்திய வணிகம் சஞ்சிகையையும் வெளியிடவுள்ளது.

**நாடக மன்றம்**

மாணவர்களினை நாடகத்துறையில் ஆற்றல் மிக்கவர்களாக உருவாக்கும் நோக்கில் நாடகத்துறை சார் செயற்பாடுகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. இதன் மூலம் தேசிய ரீதியிலான வெற்றிகளையும் எமது மாணவர்கள் பெற்றுள்ளார்கள்.

தமிழ் மொழித்தினப் போட்டிகள், இதர நிறுவனங்களின் போட்டிகளுக்கு மாணவர்கள் தயார்படுத்தப்பட்டதுடன், நாடகக் களப் பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன.

தமிழ் மொழித் தினப் போட்டியில் கோட்ட மட்டத்தில் 2ஆம் இடத்தையும், கொழும்பு பல்கலைக்கழக நாடகப் போட்டியில் 3ஆம் இடத்தையும், கொழும்பு றோயல் கல்லூரி நடத்திய நாடகப் போட்டியில் 2ஆம் இடத்துடன் சிறந்த நெறியாளர், சிறந்த நடிகர், சிறந்த இசையமைப்பாளர், சிறந்த நடிகை ஆகிய விருதுகளையும் பெற்றுக்கொண்டது. இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட வானொலி நாடகப்- பயிற்சிப்பட்டறையில் எமது மணாவர்கள் 7 பேர் கலந்து கொண்டு வானொலி நாடகம் சார் அறிவினைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

**உள்ளரங்க விளையாட்டுக்கழகம்**

கரம், மேசைப்பந்து, சதுரங்கம் முதலிய பல போட்டிகளில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்ததுடன், வாரந்தோறும் பயிற்சிகளையும் வழங்கிவருகிறது. மேசைப்பந்தாட்டத்தில் தொடர்ந்தும் மாகாணமட்டச் சம்பியனாகியுள்ளது.

**தேசிய இளைஞர் சேவைமன்றம்**

இளைஞர்களுக்கான தலைமைத்துவத்தை வளர்ப்பதற்குப் பல செயற்பாடுகளை முன்னெடுத்துவருகிறது. கட்டுரை, கவிதை முதலிய போட்டி களுக்கும் மாணவர்களைத் தயார்ப்படுத்திவருகிறது.

**விளையாட்டுத்துறை பதிவுகள்.**

விளையாட்டுத்துறை முதல்வர் மற்றும் பொறுப்பாசிரியர்கள் மாணவர்களின் அயராத கடின உழைப்பின் பயனாக எமது விளையாட்டுத்துறையை வெற்றிகரமாக முன்னிறுத்த முடிந்துள்ளது. இவர்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றியமைக்காக நன்றி கூறுகின்றேன்.

மேலும் கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட விளையாட்டுப் போட்டிகளில் எமது மாணவர்களின் சாதனைகள் திருப்தி அளிப்பனவாக காணப்படுகின்றன. 2012 இன் விளையாட்டுப் போட்டி முடிவுகள் பின்வருமாறு அமைந்துள்ளன.

**உதைபந்தாட்டக்கழகம்**

சிறிது கால இடைவெளிக்குப் பின் எமது உதைபந்தாட்ட அணிகள் மாகாணம் வரை சென்றதும் 19 வயதுப் பிரிவு அணி தேசியம் வரை சென்றதும் குறிப்பிடத்தக்கது. மாணவர்களது முயற்சி, பொறுப்பாசிரியர்கள் மற்றும் பயிற்றுனரது தொடர்ச்சியான பயிற்சி மெச்சத்தக்கது.

# *ATHELETIC PERFORMANCE 2012*

| NAME | AGE | EVENT | COMPETITION | PLACE | ACHIEVEMENT |
|---|---|---|---|---|---|
| S. Pakirathathas | un 15 | Discus Throw | District | 3rd | 29.0 m |
| T. Senthorjan | un 15 | Long Jamp | District | 3rd | 4.80 m |
| K. Thusiyanthan | un 17 | Shot Put | District | 2nd | 10.86 m |
| K. Nirojan | un 17 | 100 M H | Provincial | 2nd | 18 .4 Se |
| | | 400 M H | Provincial | 1st | 1.00.0Se |
| S. Koneswaran | un 17 | Shotput | District | 3rd | 10.80 m |
| | | Javelin Throw | District | 3rd | 37.86 m |
| D. Joy Ahas | un 17 | Long Jamp | District | 2nd | 5.76 m |
| J. Abiman | un 19 | 100 M | Provincial | 2nd | 11.8 Se |
| | | 200 M | Provincial | | 24.2 Se |
| S. Sajeevan | un 19 | TripileJamp | Provincial | 2nd | 12.85 m |
| | | 400 M H | Provincial | | 1.01.4 Se |
| N. Dineshkumar | un 19 | 1500 M | District | 2nd | 4.38.4 Se |
| | | 5000 M | | | 19 : 48.2 Se |
| R. Raruraj | un 17 | High jump | Provincial | 2nd | 1.80 m |
| S. Sajeevan | un 19 | 4 x 400 M | Provincial | 1st | 3 : 39 .6 Se |
| J. Abiman | | | | | |
| A. Ravivarman | | | | | |
| N. Dineshkumar | | | | | |
| M. Harish | un 21 | Long Jamp | Provincial | 3rd | 6.20 m |

எமது மாணவர்களை பயிற்றுவித்து சாதனைகள் மேகொள்ள உதவிய திரு. ச. சுகீரதன் ஆசிரியருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

எமது வருடாந்த இல்ல மெய்வல்லநர் விளையாட்டுப் போட்டி 2013 அன்று இடம்பெற்றது. விளையாட்டு முதல்வர் மற்றும் பொறுப்பா சிரியர்கள் மாணவர்களின் அயராத கடின உழைப்பின் பயனாக எமது விளையாட்டுத்துறையை வெற்றிகரமாக முன்னிறுத்த முடிந்துள்ளது. இவர்கள் பொறுப்புடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றியமைக்காக நன்றி கூறுகின்றேன்.

## Games

The performance of our school at the games organized by the department of Educational for 2012

| Games | Age | Zonal | District | Provincial |
|---|---|---|---|---|
| Table Tennis | Un 19 | Champions | Champions | Champions |
| | Un 15 | Champions | Champions | Runners – up |
| Carom | Un 15 | 2nd Runner-up | 2nd Runner-up | 2nd Runner-up |
| Basket Ball | Un 19 | Runner-up | Runner-up | Runners – up |
| Soft Ball Cricket | Un 19 | Champion | Runner-up | - |
| Elle | Un 19 | Champion | - | - |
| Hockey | Un 19 | 2nd Runner-up | 2nd Runner-up | - |
| Soccer | Un 13 | Champion | - | - |
| | Un 15 | Champion | Runner-up | - |
| | Un 16 | - | - | - |

We thanks the following for trained our children in the respective

1. Mr. V.R.Valaine Dinesh - Hockey
2. Mr. J. Mohan - Table Tennis
3. Mr. N. Puvanenthiran - Carom
4. Mr. S. Suheethan - Soft Ball Cricket, Elle
5. Mr. S. Vakeswaran - - Basket Ball

**துடுப்பாட்டச் சாதனைகள்.**

யாழ்ப்பாணக் கல்லூரியால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட றோயல் விமலேந்திரன் வெற்றிக் கிண்ணம் 2013, 20 : 20 துடுப்பாட்டப் போட்டியில் 1ஆம் இடம் பெற்றமை.

2013 பெருந்துடுப்பாட்டப் போட்டியில் சமநிலையைப் பேணி வெற்றிக்கிண்ணத்தைத் தக்க வைத்தமை.

50 பந்துப் பரிமாற்றம் கொண்ட ஒரு நாள் போட்டியில் யாழ் பரியோவான் கல்லூரியை வென்று 1ஆம் இடம் பெற்றமை.

13 வயது அணி அகில இலங்கை ரீதியான போட்டியில் 1ஆம் சுற்று, 2ஆம் சுற்றுக்கு தகுதிபெற்றது.

15 வயதுப் பிரிவு அணி அகில இலங்கை ரீதியான போட்டியில் 1ஆம் சுற்று, 2ஆம் சுற்று, 3ஆம் சுற்றுக்கு தகுதிபெற்றது.

17 வயதுப் பிரிவுகளில் அகில இலங்கை ரீதியாக 1ஆம் சுற்று, 2ஆம் சுற்றுக்கு தகுதி பெற்றது.

19 வயதுப் பிரிவு அணி வீரர்களில் அகில இலங்கை ரீதியான போட்டியில் 6 வீரர்கள் மாவட்ட, மாகாண போட்டியில் கலந்து கொண்டமை.

17 வயதுப் பிரிவு அணி வீரர் ஒருவர் அகில இலங்கை ரீதியில் மாவட்ட, மாகாண மட்ட போட்டியில் பங்குபற்றியமை.

இப் பெறுபேறுகளைப் பெற்றுத்தந்த மாணவர்களுக்கும், இவ்வணியினரைப் பயிற்றுவித்த பயிற்றுவிப்பாளர் திரு. ச. சுரேஸ்மோகனுக்கும் எமது மனமார்ந்த பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

பல சவால்களுக்கு மத்தியிலும் விளையாட்டுத் துறையில் கணிசமான பெறுபேறுகளை இக் கல்லூரி பெறுவதற்குக் காரணமாக இருந்த விளையாட்டு முதல்வர் திரு. இ. பிரபாகரன் ஆசிரியரையும் பராட்டுகின்றேன்.

## பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

எமது கல்லூரியில் பாடசாலை அபிவிருத்திச்சங்கத்தின் செயற்பாடுகள் அளப்பரியன. பாடசாலையின் வளர்ச்சிக்கும், வெற்றிகரமான முகாமைத்துவ செயற்பாட்டிற்கும் பக்கபலமாக விளங்குகின்றது. குறிப்பாக விளையாட்டுத்துறையின் சகல செயற்பாடுகளும் அதன் பங்களிப்புடனேயே இடம் பெற்றுவருகின்றன. பயிற்றுவிபபாளருக்குரிய வேதனம், விளையாட்டுக் களில் பங்குபற்றுவதற்கான போக்குவரத்து ஒழுங்குகள் என்பனவும் இதில் அடங்கும்.

மேலும் பாடசாலையின் பௌதிகவளங்களின் பராமரிப்புக் களையும் அபிவிருத்திச்சங்கமே மேற்கொண்டுவருவதுடன் அதிபர், ஆசிரியர்கள் பழைய மாணவர்களுடன் சிறப்பான உறவினையும் பேணிவருகின்றது என்பதை மகிழ்ச்சியுடள் அறியத்தருகின்றேன்.

## பழைய மாணவர் சங்கங்கள்

கல்லூரியின் வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் அதன் செயற்பாடுகளுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளித்துவருவோர் பழைய மாணவர்களே. அண்மைக் காலங்களில் மேலும் பல பொறுப்புமிக்க பணிகளை ஆற்றிவருகின்றது. அவற்றில் நீச்சல் தடாக பராமரிப்பு வேலைத்திட்டம், வறிய மாணவர்களுக்கான புலமைப்பரிசில் வேவைலைத்திட்டம், மைதான அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டம், பிரான்ஸ் பழைய மாணவர்களால் மேற்கொள்ளப்படும் விஷேட கல்விச் செயற்திட்டம் தரம் 9 மாணவர்களுக்கும், தரம் 11 மாணவர்களுக்கு லண்டன் பழைய மாணவர்களாலும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. மேலும் மாணவர்களுக்கான மேலதிக விசேட ஆங்கில வகுப்புகள், பொதுப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மேலதிக விஷேட வகுப்புகள் முதலாக பல்வேறு ஆக்கபூர்வமான செயற்றிட்டங்களை நடத்தி வருகின்றது. அத்துடன் தரம் 10, 11 மாணவர்களுக்கு ஆறுதல் நிறுவனத்தின் கற்றல் ஊக்கிகளை இலவசமாக பெற்றுக்கொடுத்தனர். துடுப்பாட்டப் பயிற்றுவிப்பாளருக்கான வேதனம் வழங்கி வருகின்றமை, நிறுவுனர் தினத்தின் போது விருந்துபசாரம் செய்து ஆசிரியர்களைக் கௌரவித்தமை என்பன குறிப்பிடத்தக்கனவாகும். எமது பழைய

மாணவர்களின் சேவையைப் பாராட்டுவதுடன், தொடர்ந்தும் தமது கல்லூரியின் வளர்ச்சிக்கு உரிமையுடன் பணிபுரிய முன்நிற்பார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

மேலும் எமது பெருமைக்குரிய பழைய மாணவரும், மாண்பு மிக்க கௌரவ அமைச்சருமாகிய K.N. டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எமது கல்லூரியின் பல்வேறு செயற்பாடுகளுக்கும் ஆர்வமுடன் உதவி புரிந்து வருகின்றார். குறிப்பாக இவ்வருடம் எமது விளையாடடுத்துறைக்கு ரூபா மூன்று இலட்சம் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை பெற்றுக் கொடுத்துள்ளார். அத்துடன் நீச்சல் சீருடைக்கென ரூ 144,000 கொடுத்து தவியுள்ளார். இதற்கு எம் அனைவரின் பாராட்டும் உரித்தாகுக. தொடர்ந் தும் எம் கல்லூரியின் வளர்ச்சிக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்வார் என்பது எமது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். கௌரவ அமைச்சருக்கு நன்றி கூறுகின்றோம்.

மேலும் எமது பழைய மாணவர் கலாநிதி நா. எதிர்வீரசிங்கம் அவர்கள் எமது மைதான புனரமைப்பில் காட்டி வரும் அயராத முயற்சியினால் அது நிறைவுறும் தருவாயில் உள்ளது. அத்துடன் அவரின் இரண்டாம் கட்டப் பணியாக மைதானத்தில் பார்வையாளர் மண்டபம் அமைக்கும் பணி வெகு விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளமை மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும். அவர் எமது கல்லூரி மீது கொண்டுள்ள அளவற்ற பற்றுக்காகவும், பணிக்காகவும் அவரைப் பாராட்டுகின்றோம்.

மேலும் பேராசிரியர் குகநேசராஜா அவர்கள் எமது கல்லூரியின் மாணவர் விடுதி புதிதாக ஆரம்பிக்கப்பட அதற்குத் தேவையான சகல உதவிகளையும் வழங்கியுள்ளார். அத்துடன் மேலைத்தேய வாத்தியக் குழுவினருக்குத் தேவையான சீருடைகளைப் பெற்றுக் -கொடுத்துள்ளார். மேலும் நிறுவுனர், வணக்கத்துக்குரிய லிஞ்ச் அவர்களுக்கு உருவச் சிலை யையும், கல்வியியலாளர்கள், நலன்விரும்பிகளுக்கான உருவப் படங்களையும் கல்லூரியில் திறந்து வைக்க உதவியுள்ளார். இதற்காக அவரைப் பாராட்டுகின்றேன்.

மேலும் பழைய மாணவர்களின் பணி எமது கல்லூரிக்கு எதிர்காலத்தில் நிறைவாகக் கிடைக்குமென நம்புகின்றோம்.

# நன்றியுரை

அன்பான மாணவர்களே! பெற்றோர்களே! பழைய மாணவர்களே! இப் பரிசளிப்பு நிகழ்வானது மாணவர்கள் தங்களைப் புத்துயிர்ப்புச் செய்து கொள்வதற்கான விஷேட செய்தியைப் புலப்படுத்தி நிற்கின்றது என்பதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள். கல்லூரியானது கல்வியுடன், ஒழுக்கத்தையும் எதிர்கால சவால்களைச் சமாளித்து வழிகாட்டுவதற்கான அனைத்துத் திறமைகளையும் மனப்பாங்குகளையும் பெற்றுக்கொடுக்கப் பாடுபடுகின்றது.

மேலும் பெற்றோர், பழைய மாணவர்கள், ஆகிய உங்களின் பூரண ஒத்துழைப்புடன் மாணவர்கள் பல்வேறு மட்டங்களில் சாதனைகளைப் புரிந்து பாடசாலைக்குப் பெருமை சேர்த்து வருகின்றார்கள். இதற்காக மாணவர்களுக்கும், பெற்றோர், பழையமாணவர்களாகிய உங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தொடர்ந்து எமது கல்லூரி வளர்ச்சியை உறுதிப்படுத்தவும், மத்தியின் மணிக்கொடி நிலைத்து நிற்கவும் எம்முடன் இன்று போல் என்றும் கை கோர்த்து நிற்பதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாணவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் அதிகரித்துச் செல்வதற்கு பழைய மாணவர்களால் வழங்கப்படும் புலமைப்பரிசில் திட்டங்களும் காரணமாக அமைகின்றன. மைதான அபிவிருத்திப் பணிகளையும், புலமைப்பரிசில் நிதிச் செயற்பாடுகளையும், வெளிநாட்டுப் பழைய மாணவர்களிடமும், மற்றும் கொழும்பு பழைய மாணவர்களிடமும் பெற்று மாணவர்களது கல்வி, விளையாட்டு மற்றும் எல்லாத்துறைகளையும் முன்னின்று செயறபடுத்திவரும் பழைய மாணவர் இணைப்பாளர் திரு. க. மகேந்திரநாதன் அவர்களுக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

பிரான்ஸ் நாட்டு பழைய மாணவ பிரதிநிதியும் இணைப்பாளரு மாகிய திரு. முத்துக்குமார் அவர்கள் கல்வித்துறை மாத்திரமன்றி விளையாட்டு மற்றும் எல்லாத்துறைகளுக்கும் ஆர்வம் காட்டி வருகின்றார்.

மேலும் நீச்சல் தடாகத்தினை பல சிரமங்களின் மத்தியில் முகாமை செய்து வரும் பழைய மாணவன் திரு ஐயம்பிள்ளை மோகனகுமார் அவர்களுக்கும் உங்கள் அனைவர் சார்பாகவும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் உங்கள் அனைவருக்கும் இறைவனின் ஆசி சிறப்புற கிடைக்கப் பிரார்த்திக்கின்றேன். இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்பித்துக்கொண்டிருக்கும் மத்தியின் மைந்தனும், யாழ் பல்கலைக்கழக உடற்கல்விப் பணிப்பாளருமாகிய திரு. கதிர்காமநாதன் கணேசநாதன் அவர் தம் பாரியார் திருமதி. ஞானசக்தி கணேசநாதன் அவர்களுக்கும் எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

மேலும் இவ் விழாவில் ஆசியுரை வழங்கிச் சிறப்பித்த இக் கல்லூரியை எமக்கருளிய மெதடிஸ்த திருச்சபையின் சென் பீற்றர்ஸ் தேவாலய குரு முதல்வர் அவர்களுக்கும், எமது அழைப்பினை ஏற்று இவ் விழாவில் கலந்து சிறப்பித்த பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், அயற்பாடசாலை அதிபர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

சிறப்பாக கல்லூரியில் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளுக்காக மேலதிக வகுப்புக்களையும், வழிகாட்டல்களையும் நடத்திய பாட

ஆசிரியர்களுக்கும், தேசிய மட்டத்தில் நடனத்துறையில் தங்கப் பதக்கம் பெற்றுத்தர உழைத்த நடன ஆசிரியர், இசை ஆசிரியர், விளையாட்டுத் துறையில் பதக்கம் பெற்றுத்தர உழைத்த விளையாட்டுத்துறை ஆசிரியர், பயிற்றுனர்கள், துடுப்பாட்ட பயிற்றுனர் பொறுப்பாசிரியர்களுக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

மேலும் கல்லூரியின் சகல பாடவிதான, இணைப்பாட விதான மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பல வழிகளிலும் உதவிவரும் பிரதி அதிபர், உப அதிபர், பகுதித் தலைவர்கள், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

கல்லூரியின் நிர்வாகச் செயற்பாடுகளுக்குதவிவரும் கல்வித் திணைக்கள அதிகாரிகள், ஊழியர்களுக்கும் எனது நன்றிகள்.

எல்லா வழிகளிலும் என்னுடன் தோளோடு தோள்நின்று ஒத்துழைத்த கல்லூரிச் சமூகத்தினருக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அன்புடன்**
**திரு. S.K எழில்வேந்தன்**
**அதிபர்**

# SPORTS PRIZES

01. The prize awarded by Mr.Sellathurai Sithamparanathan
for the champion
in the under 15 chess **Not awarded**
in the under 19 **Not awarded**

02. Mr.V.Kanagalingam memorial prize donated by
Mr.Iyaduri Mohanachandran
for the best bowler in under19 **Mas. B. Hariharan**
for the best all rounder in under19 **Mas. P. Darveen**

03. Mr.V.A.Vadivelu memorial Prize donated by Iyaduri Shanmugalingam
for the best athlete **Mas. R. Raguraj**
for the under17 all rounder in cricket **Mas. P. Nirojan**

04. Mr.Victor.Kirubaraj memorial Prize donated by his family
for the best fielder under 19 **Mas. K. Uliouskanistan**

05. Mrs. Lalitha Shanmugalingam memorial prize donated by
Mr. V.K. Shanmugalingam
for the best Cricket player
In under15 Cricket **Mas. A. Alanraj**

06. Former Principal Mr. E. Sabalingam memorial Prize Doneted by
V. K. Shanmugalingam for the best soccer player
In under15 Foot ball **Mas. P. Kamiltan**

07. The best soccer player
In under13 **Mas. R. Remsan**
In under17 **Mas. J. Dineshkumar**

08. Big match awards
The best batsman **Mas. A. Alanraj**
The best all rounder **Mas. P. Darveen**

09. The best softball cricketer **Mas. S. Sugeevan**

10. The best Table tennis player **Mas. M. Agashan**

11. The best Kabadi player **Not awarded**

| | |
|---|---|
| 12. The best Hockey player | **Not awarded** |
| 13. The best Ella player | **Mas. N. Dineshkumar** |
| 14. The best Basketball player | **Mas. S. Sugeenthiran** |

15. Mr.V.T.Mahalingam memorial prize donated by Mr.V.T. Sivalingam for the best sportsman **Mas. S.Sageevan**

## Colours awards

| | | |
|---|---|---|
| 01. Basket ball | | **Not awarded** |
| 02. Cricket | | **Mas. K. Uliuskanistan** |
| | | **Mas. S. Somitharan** |
| | | **Mas. B. Niruban** |
| 03. Athletic | | **Mas. S. Sageevan** |
| | | **Mas. R. Raguraj** |
| | | **Mas. J. Abiman** |
| 04. Table Tennis | | **Mas.M. Agashan** |
| | Re colour award | **Mas. S. Samuel** |
| | Re colour award | **Mas. S. Sageevan** |
| | Re colour award | **Mas. B. Ajanth** |
| | | **Mas. B. Niruban** |
| 05. Weight lifting | | **Mas. I. Santhakobi** |

### Special Medal awards

Inter school national level athletic events -2012

Weight lifting National 2nd Place **Mas. N. Dilaxkumar**

# MEMORIAL PRIZES

01. The prize awarded by Mrs Joy Smith and her son Dr.J.D.C Smith in memory Of Rev.C.A.Smith former Principal

    to the best G.C.E(A/L) first year Science student **Mas. S. Samuel**
    to the best G.C.E(A/L) first year Maths student **Mas. S. Gopinarth**
    to the best G.C.E(A/L) first year Commerce student **Mas. S. Kabilson**

02. The prize awarded by M.A.Mariathas in memory of Mr.Singarayar to the best maths students **Mas. T. Saranraj**

03. The prize awarded by Mrs.M.Kandasamy in memory of A.E.Tamper,former principal to the best G.C.E (A/L) Student **Mas. S. Samuel**

04. The prize awarded by Dr.Ombahavan in memory of Mr.sellaiah to the best allround Student **Mas. M. Agashan**

05. The prize awarded by Dr.S.Sivakumaran in memory of Mr.Kanthappar Shanmugam to the best Student in Hinduism in G.C.E (O/L) **Mas. P. Jeganathan**

06. Mas.K.Satheeskanthan memorial prize awarded by the board of prefects to G.C.E(A/L) Mathematics / Science student **Mas. S. Gopinath**

07. The prize awarded by Mr.S.Sithamparanathan in memory of Mr. Sinnaiah Sellathurai to the best Science student **Mas. S. Kajan**

08. The prize awarded by Mr.K.Mahendranathan in memory of Mr.S.Ranjithan

    to the best reader in unior secondary **Mas. S. Mayuran**
    to the best reader in middle school **Mas. M. Pushparam**
    to the best reader in senior secondary **Mas. P. Thushanth**

09. The prize awarded by Mr.A.S.Ratnasingam in memory of Mr. N. S. Ratnasingam to the best student in middle school

**Mas. N. Jeevapragash**

10. The prize awarded by Dr.Ponnampalam Saravanabavan in memory of Mr. Sabapathy Ponnampalam for the best student in grade 6

**Mas.S.Yasotharan**

11. The prize awarded by Dr.Ponnampalam Saravanabavan in memory of Mrs.Pakyawathy Ponnampalam for the best student in grade 7

**Mas. N. Vithushan**

12. The prize awarded by Dr.Ponnampalam Saravanabavan in memory of Mrs. Pakyawathy Ponnampalam for the best student in grade 8

**Mas. K. Iyalspelman**

13. The prize awarded by Dr.Ponnampalam Saravanabavan in memory of Mr. Sabapathy Ponnampalam for the best student in grade 9

**Mas. L. Piriyanthan**

14. The prize awarded by Mrs.Sivapakyavathy Nadarasa in memory of Dr. V. Nadarasa for the best student in English medium

**Mas.S. Ramkumar**

15. The prize awarded by board of prefects in memory of Mas.P. Vipulananthan for the best student in grade 10

**Mas.M. Agashan**

16. The prize awarded by Dr.Ananthan Harin in memory of Dr. Selliah Ananthan for the best performance in all subjects

**Mas.S. Ramkumar**

17. The prize awarded by Mr.Nagalingam Kulanthaivelu in memory of Mr. Kulainthaivelu Sathiyenthra

| | |
|---|---|
| for the best English student | **Mas. M. Agashan** |
| for the best Science student | **Mas. S. Pavithram** |
| for the best History student | **Mas.N. Senthuran** |

18. The prize awarded by Mr. T. Nishakaran in memory of Mrs.Thedchanamoorthy Jeyathambihai for the G.C.E(A/L) first year Mathematics Student **Mas.S.Gopinath**

19. The prize awarded by Mr.Thambiah Nadaraja in memory of Mr.Nadaraja ViJayabalan for the best student in Tamil Literature **Mas.J. Tharshan**

20. The prize awarded by Mrs. Rajadurai in memory of fomer Principal Mr. K. Rajadurai for the best Prize day speaches.
    English Speach **Mas. S. Ramkumar**
    Tamil Speach **Mas. S. Gobinath**

## SPECIAL PRIZES

01. This prize awarded by Teachers' Circle of the College for the best student in grade 10 **Mas. V. Vithushan**

02. The prize awarded by S . Rajkumar for the best students in G.C.E (O/L) **Mas. S. Ramkumar**

# MEDAL AWARDS

01. **Mas. Uthayakumar Vijeeth**

Subramaniyam Nagarajah (Retired MSO Jaffna Post office) Memorial gold medal Donated by Nagarajah Sooriyakumar (Norway) old Boy of Jaffna Central Awarded for obtaining the highest Z score in G.C.E A/L 2011 and for being selected for the faculty of Engineering.

02. **Mas. Jeyaramanan Srikumaran**

Subramaniam Nagarajah (Retired MSO jaffna Post office) Memorial Gold Medal donated by Nagarajah Uthayakumar (Swiss) Old Boy of Jaffna Central Awarded for obtaining the highest Z score in G.C.G. A/L 2011 and for being selected for the faculty of management.

03. **Mas. Vinasithamby Kajeepan**

Subramaniam Nagarajah (Retired MSO jaffna Post office) Memorial Gold Medal donated by Nagarajah Mahesan (France) Old Boy of Jaffna Central Awarded for obtaining the highest Z score in G.C.G. A/L 2011 and for being selected for the faculty of Medicine.

04. **Mas. A. Jude Nishanthan**

The Gold Medal awarded for obtaining 3 A in G.C.E A/L (2012)

05. **Mas. S. Ramkumar**

The Gold Medal awarded for obtaining best result in G.C.E (O/L) 2012

06. **Mas. S. Pranavan**

The Gold Medal awarded for the first rank in the district (ICT) in G.C.E (A/L) 2012

**07. Mas. K. Vipulan**

The Gold Medal award for the best secondary student.

## SPECIAL PRIZES FOR DEVOTED SERVICE

| | | |
|---|---|---|
| 1. | St. Johns Ambulance | Mas. R. Veereshvarananthan |
| 2. | Scouts | Mas. S. Vijiyakumar |
| 3. | Leo Club | Mas. T. Dishan |
| 4. | Inteact Club | Mas. S. Kirishanthan |
| 5. | Cadet | Mas. T. Abiraja |

## Prize Giving List - 2013

| Grade 6 | | |
|---|---|---|
| Name | | Subject |
| 1 | Mas. K. Rakesarma | Saivam, Science, History, Geography, Health Science and General Proficiency |
| 2 | Mas. T. Saruhasan | Mathematics |
| 3 | Mas. R. Iniyavan | Tamil and General Proficiency |
| 4 | Mas. T. Vernushanth | Roman Catholism, Art and General Proficiency |
| 5 | Mas. M. Jerom | NRC |
| 6 | Mas. V. Samson | English |
| 7 | Mas. S. Yasotharan | Practical and Technical Skills and General Proficiency |
| 8 | Mas. E. Vithushan | Citizenship and General Proficiency |
| 9 | Mas. A. Pirathapan | Dance and General Proficiency |
| 10 | Mas. S. Sayeesankar | Music |
| 11 | Mas. R. Sarujan | Drama |
| 12 | Mas. R. Thenujan | General Proficiency |
| 13 | Mas. V. Vithushan | General Proficiency |

| Grade 7 | | |
|---|---|---|
| Name | | Subject |
| 1 | Mas. S. Jeyavakeesan | History, Geography, Citizenship, Saivam, Science, Drama and General Proficiency |
| 2 | Mas. S. Miksan | Mathematics, Health Science, Music & General Proficiency |
| 3 | Mas. T. Athiththan | Tamil and Art |
| 4 | Mas. K. Thuvaragan | English and General Proficiency |
| 5 | Mas. Y. Jude franko | Roman Catholism |
| 6 | Mas. A. Abilrajah | NRC |
| 7 | Mas. N.Vithushan | Practical and Technical skills and General Proficiency |

| Grade 8 | | |
|---|---|---|
| Name | | Subject |
| 1 | Mas. K. Iyalspelman | English, Roman Catholism, Citizenship and General Proficiency |
| 2 | Mas. S. Kirishanth | Tamil |
| 3 | Mas. S. Sivarathan | Saivam, Health Science, and General Proficiency |
| 4 | Mas. P. Ajith | Mathematics and Music |
| 5 | Mas. R. Shantharuban | Science, Practical and Technical Skills and General Proficiency |
| 6 | Mas. A. Kajeepan | History and General Proficiency |
| 7 | Mas. R. Benjamin | NRC, Geography and General Proficiency |

| | | |
|---|---|---|
| 8 | Mas. S. Gowsikan | Art |
| 9 | Mas. M. Jonathan | Dance and General Proficiency |
| 10 | Mas. T. Shanmugapriyan | Drama |
| 11 | Mas. L. Lowemikan | General Proficiency |
| 12 | Mas. V. Tharsikan | General Proficiency |
| 13 | Mas. S. Tharshan | General Proficiency |
| 14 | Mas. K. Mithushan | General Proficiency |
| 15 | Mas. R. Vithushan | General Proficiency |
| 16 | Mas. I. Sanujan | General Proficiency |
| 17 | Mas. G. Navaneethan | General Proficiency |
| 18 | Mas. V. Thenujan | General Proficiency |
| 19 | Mas. N. Nivethan | General Proficiency |
| 20 | Mas. M. Sivapriyan | General Proficiency |

| Grade 9 | | |
|---|---|---|
| | Name | Subject |
| 1 | Mas. A. Sujeevan | Geography, Citizenship and General Proficiency |
| 2 | Mas. L. Priyanthan | Saivam, Music and General Proficiency |
| 3 | Mas. N. Jeevapragash | Science, RC, Health Science and general Proficiency |
| 4 | Mas. S. S. Kajinthan | Mathematics |
| 5 | Mas. J.R. Paul Pratheep | English |
| 6 | Mas. K. Vipulan | History, Drama, Practical and Technical Skills and General Proficiency |
| 7 | Mas. K. Gowsikan | Art |
| 8 | Mas. S. Meerujan | Dance |
| 9 | Mas. P. Sanjeevaram | General Proficiency |
| 10 | Mas. P. Matheesan | General Proficiency |
| 11 | Mas. S. Sarankan | General Proficiency |
| 12 | Mas. M. Delaxan | General Proficiency |
| 13 | Mas. A. Aswinrajah | General Proficiency |
| 14 | Mas. A. Prasanth | General Proficiency |
| 15 | Mas. R. Sinthujan | General Proficiency |
| 16 | Mas. T. Neerajah | General Proficiency |
| 17 | Mas. R. Sanjeevan | Tamil, General Proficiency |
| 18 | Mas. N. Vithurshan | General Proficiency |
| 19 | Mas. R. Balaganeshan | General Proficiency |
| 20 | Mas. R. Arivanpan | General Proficiency |
| 21 | Mas. L. Nixan | General Proficiency |
| 22 | Mas. R. manoshe | NRC |

| Grade 10 | | |
|---|---|---|
| Name | | Subject |
| 1 | Mas. V. Vithushan | Tamil, Saivam, Science, History, Health Science, Drama and General Proficiency |
| 2 | Mas. M. Agashan | English, ICT and General Proficiency |
| 3 | Mas. S. Vinoth | Mathematics |
| 4 | Mas. A. Thanushan | Roman Catholism |
| 5 | Mas. B. Keshon | NRC |
| 6 | Mas. N. Senthuran | Art and General Proficiency |
| 7 | Mas. S. Lakshayan | Music and Geography |
| 8 | Mas. R. Rubathas | Tamil Literature |

| Grade 11 | | |
|---|---|---|
| Name | | Subject |
| 1 | Mas. S. Ramkumar | Saivam,Science, History, Tamil, English. Business and Accounting Studies, Maths and Information and communication Technology |
| 2 | Mas. S. Kajan | Saivam, Science, Tamil, English., Maths Business and Accounting Studies, and Information and communication Technology |
| 3 | Mas. A. Amuthan | Catholism, Maths, Tamil, English, Business and Accounting Studies, and Information and communication Technology |

| Advanced Level<br>Science | | |
|---|---|---|
| Name | | Subject |
| 1 | Mas. S. Samuel | Biology |
| 2 | Mas. S. Gobinath | Chemistry, Physics and Combined Matha |

| Advanced Level<br>Commerce | | |
|---|---|---|
| Name | | Subject |
| 1 | Mas. V. Prasanth | Accounting and General Proficiency |
| 2 | Mas. S. Kabilsan | Business Studies & Economics and General Proficiency |
| 3 | Mas. P. Naruban | General Proficiency |

| Advanced Level<br>Arts | | |
|---|---|---|
| | Name | Subject |
| 1 | Mas. T. Thusyanthan | Tamil, Political Science |
| 2 | Mas. T. Praveen | Drama and Theatre |
| 3 | Mas. U. Atinchajan | Geography |
| 4 | Mas. J. Sulojan | Art |
| 5 | Mas. V. Thilaxakumar | Logic |
| 6 | Mas. N. Nishanth | General Proficiency |
| 7 | Mas. A. Ketheeswaran | General Proficiency |

## Universitry Entrance - 2011

| No. | Name | Subject |
|---|---|---|
| 01. | Mas. N. Kajeepan | Medicine |
| 02. | Mas. U. Vijeeth | Engineering |
| 03. | Mas. K. Balakajan | Engineering |
| 04. | Mas. L. Sajeevan | Engineering |
| 05. | Mas. K Nishanth | Physiotherapy |
| 06. | Mas. I. Gowsikan | I.T |
| 07. | Mas. J. Srikumaran | Management |
| 08. | Mas. N. Thusikesan | Management |
| 09. | Mas. A. Kapilanesan | Management |
| 10. | Mas.S. Prasath | Management |

# College Song

Wet the ground and wind opposing,
Just ten minutes yet to play:
Play up Central, on reposing
On the gains of yesterday,
Now's the time for combined action;
Pass the ball from man to man:
Never Seftish play nor faction
Proved worthwhile since sports began.

**Chorus :**
Central! Rally for the school then
Take the field with one accord;
Keep your courage cool and clean then,
Central's flag must ne'er be lowered.

On the field of life when striving,
Keep your honour true and bright,
Play up Central Ever thriving
On the fruits of grace and light,
For your Comrades of the old days,
Scattered far though they may be;
For your school, and for her true praise,
Live in service glad and free!

**Chorus:**

Shampavi Printers, Jaffna. 021 2224143